## சுருக்கம்

நிலம்-நெல்லிக்குப்பம் நகராட்சி - நெல்லிக்குப்பம் நகராட்சி வார்டு-பி, பிளாக்-21, நகரளவு எண்.57-ல் உள்ள தனியார் வீடு மற்றும் காலியிடம் -புதிதாக அமைக்கப்படவுள்ள பேரூந்து நிலையத்தின் நுழைவு வாயிலில் அமைந்துள்ள தனியாருக்கு சொந்தமான வீடு மற்றும் காலி மனையை நகராட்சியின் பொது நிதியிலிருந்து கிரயத்திற்கு வாங்க அனுமதி அளித்து ஆணை வெளியிடப்படுகிறது.

---

## நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (ந.நி.4(2)துறை

அரசாணை(ப)எண்.401 நாள்:4.10.2006

பார்வை:

நகராட்சி நிர்வாக ஆணையர், கடிதம் ந.க.எண்.19808/டிபி2 நாள் 7.4.2003(ம) 21.8.2006.

-----

ஆணை:

நகராட்சி நிர்வாக ஆணையர், நெல்லிக்குப்பம் நகராட்சியில் புதிய பேரூந்து நிலையம் அமைக்க நகராட்சிக்கு சொந்தமான வார்டு பி, பிளாக் 21, நகரளவு எண்.14, பகுதி 56 மற்றும் 59ல் அமைந்துள்ள 8574 ச.மீ. பரப்பளவு உள்ள இடம் தேர்வு செய்யப்பட்டு ''டுபிட்கோ'' நிறுவனத்தின் மூலம் நிதியுதவி பெற்று புதிய பேருந்து நிலையம் அமைக்க நகர் மன்றத்தின் ஒப்புதல் பெறப்பட்டு உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது என்றும், பேரூந்தது நிலையம் அமைக்க நகராட்சி இடத்திற்கு இடையில் உள்ள நுழைவாயிலில் தனியார் நிலம் மற்றும் கட்டடம் அமைந்திருப்பதால் பேரூந்துகள் தங்கு தடையின்றி உள்ளே சென்றுவர இயலாத சூழ்நிலை உள்ளதாகவும், மேற்படி தனியாருக்கு சொந்தமான வார்டு-பி, பிளாக் 21, நகரளவு எண்.57ல் உள்ள 515 ச.மீ பரப்பளவுள்ள அடிமனையும் அதில் உள்ள நாட்டு ஒடு மற்றும் மதராஸ் ஓட்டு தளம் கொண்ட வீட்டினையும் வாங்கி அப்புறப்படுத்த வேண்டியுள்ளதாலும், மேற்படி நிலத்தின் உரிமையாளர்கள் மாவட்ட ஆட்சித் தலைவர் நிர்ணயம் செய்யும் தொகையான ரூ.14.81 லட்சத்திற்கு நிலத்தையும் வீட்டையும் நகராட்சிக்கு கிரயத்திற்கு கொடுக்க சம்மதித்து ஒப்புதல் பத்திரம் எழுதி கொடுத்துள்ளார்கள் என்றும், மேற்படி நிலத்தை கடலூர் மாவட்ட ஆட்சித் தலைவர் நிர்ணயிக்கும் விலைக்கு அரசின் அனுமதி பெற்று வாங்க நகர் மன்றத் தீர்மானம் 264, நாள் 30.01.2003ல் அனுமதிக்கப்பட்டுள்ளது என்றும், பேருந்து நிலையம் அமைக்க இடையூராக இருக்கும் தனியாருக்கு சொந்தமான மனை மற்றும் அதில் அமைந்துள்ள காலியிடங்களை வாங்குவதற்கு நகராட்சி பொது நிதியில் ரூ.20.00 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டு வங்கி வைப்பில் உள்ளது என்றும், எனவே பேருந்து நிலைய பணியின்

அவசியம் கருதி மேற்படி இடத்தினை நகராட்சி பொது நிதியிலிருந்து வாங்க அரசின் அனுமதியை விரைவில் பெற்றுத் தருமாறும் கேட்டுக் கொண்டுள்ளார்.

2. நகராட்சி நிர்வாக ஆணையரின் கருத்துருவை அரசு நன்கு பரிசீலனை செய்து நெல்லிக்குப்பம் நகராட்சிக்கு சொந்தமான வார்டு பி, பிளாக் 21, நகரளவு 14 (பகுதி) 56 மற்றும் 59ல் அமைந்துள்ள 8574 சதுர மீட்டர் பரப்பளவுள்ள இடத்தில் ஒருங்கிணைந்த சிறிய மற்றும் நடுத்தர நகர்ப்புற வளர்ச்சித் திட்டத்தின் கீழ் தமிழ்நாடு நகர்ப்புற நிதி அடிப்படை வளர்ச்சி நிறுவனம் (கூருகுஐனுஊடீ) மூலம் நிதியுதவி பெற்று அமைக்கவிருக்கும் புதிய பேருந்து நிலையத்தின் நுழைவு வாயிலில் அமைந்துள்ள தனியாருக்குச் சொந்தமான வார்டு பி, பிளாக்-21, நகரளவு எண்.57ல் உள்ள 515 சதுர மீட்டர் பரப்பளவுள்ள நிலத்தையும் அதில் உள்ள வீட்டினையும் கடலூர் மாவட்ட ஆட்சித் தலைவர் நிர்ணயம் செய்துள்ள விலையான ரூ.14.81 இலட்சத்திற்கு நகராட்சியின் பொது நிதியிலிருந்து வாங்குவதற்கு அரசின் அனுமதி வழங்கி அவ்வாறே இவண் ஆணையிடுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

கே.தீனபந்து,<br>
அரசு செயலாளர்.

பெறுநர்<br>
நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை-5<br>
நகராட்சி ஆணையர், நெல்லிக்குப்பம் நகராட்சி,<br>
(நகராட்சி நிர்வாக ஆணையர் வழியாக)<br>
நகல்:<br>
நகராட்சி நிர்வாகம்(ம) குடிநீர் வழங்கல்(டீஞஐஐ) துறை<br>
ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சரின்<br>
நேர்முக உதவியாளர், சென்னை-9.<br>
இகோ/உநகல்

// ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

பிரிவு அலுவலர்.